**OS. 139/2024**

**நாள். 20.04.2026.**

**பி.வா.சா.1 – ஜெயராமன்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

என் தந்தை பெயர் செல்லச்சாமி என்றால் சரிதான். என் தந்தையும், தாயாரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் என் தகப்பனாருக்கு கிரையப்பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். என் தந்தை உயிரோடு இருக்கும் வரை தாவா சொத்துக்களை யாருக்கும் பாத்தியப்படுத்தி கொடுக்கவில்லை என்றால்சரிதான். என் அப்பாவுக்கு வாதி சரஸ்வதியும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் மற்றும் நடராஜன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். நடராஜன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நடராஜனுக்கு 4 முதல் 6 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு நடராஜனுக்குரியது என்றால் சரிதான். அந்த அசல் கடவுச்சீட்டு **வா.சா.ஆ.9**. என்னிடமும் கடவுச்சீட்டு இருந்தது என்றால் சரிதான். நான் ஒருமுறை துபாய் நாட்டிற்கு சென்று 1980 முதல் 1997 வரை வேலை பார்த்துவிட்டு திரும்பிவிட்டேன். நான் இந்தியாவிலிருந்து துபாய் நாட்டிற்கு செல்லுமபோது என்னுடைய கடவுக்சீட்டில் விமானநிலைய அதிகாரிகள் ஒரு முத்திரை குத்தினார்கள் என்றால் சரிதான். அதேபோல் நான் துபாய் விமானநிலையத்தில் நான் அங்கு சென்றதற்கு Immigration அதிகாரிகள் என்னுடைய கடவுச்சீட்டில் முத்திரை குத்தினார்கள் என்றால் சரிதான். அந்த இடைப்பட்ட காலத்தில் நான் 2, 3 தடவை இந்தியாவிற்கு வந்து சென்றுள்ளேன். என்னுடைய கடவுச்சீட்டை பார்த்தால் நான் எந்தெந்த காலகட்டத்தில் நான் இந்தியாவில் இருந்தேன் என்பதும், இல்லை என்பதும், துபாயில் இருந்தேன் என்பதும் தெரியவரும் என்றால் சரிதான். அதை மறைப்பதற்காகத்தான் நான் என்னுடைய கடவுச்சீட்டை தாக்கல் செய்யாமல் இல்லை என மறைக்கிறேன் என்றால்

சரியல்ல. என் அப்பா இறந்த பின்பு UDR காலகட்டத்தில் பட்டா என் தாயார் பெயருக்கு மாறியது என்றால் சரிதான். தாயார் இறந்த பிறகு என் சகோதரி மற்றும் சகோதரர்களான எங்கள் பெயரில் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் ஜெயராமன் பிரதர்ஸ் என்றுதான் வரி செலுத்தினோம் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி நாகரெத்தினம் என் தம்பி என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி வழக்கில் கண்ட 1ம் இலக்க சொத்தை காண்பித்து 7ம் பிரதிவாதியிடம் அடமானக்கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான், அவர் அடமானக்கடன் பெற்றபோது எங்கள் யாருக்கும் தெரியாது, வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகுதான் தெரியும். நான் 7ம் பிரதிவாதி அலுவலகத்தில் விசாரித்து பார்த்தபோது 7ம் பிரதிவாதியின் கிளை அலுவலகமான உச்சிப்புளியில் கேட்கக்கும்படி கூறினார்கள் என்றால் சரிதான். அங்கு கேட்டபோதுதான் 3ம பிரதிவாதி 7ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து அடமானக்கடன் பெற்றுள்ளார் என்பது தெரியவந்தது. என் தந்தையார் சொத்தில் அவரது மக்களான வாதிக்கு ஒரு பங்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலா ஒரு பங்கும், இறந்துபோன நடராஜனின் வாரிசுகளான 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு ஒரு பங்கும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 கடவுச்சீட்டின்படி என் தம்பி நடராஜன் 23.08.1996ம் தேதி துபாயிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ளார் என்றால் தெரியாது. பின்னிட்டு 22.12.1996ம் தேதியில் இந்தியாவிலிருந்து துபாய்க்கு கிளம்பி சென்றுள்ளார் என்றால் தெரியாது. 22.12.1999 தேதியில் தான் என் தம்பி நடராஜன் மீண்டும் இந்தியாவிற்கு திரும்பியுள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதியின் வழக்குரைக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய நான்தான் விவரம் சொன்னேன் என்றால் சரிதான். வாதி அவரது கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். வாதிக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். வாதிக்கு குடியிருக்க இடமில்லை என்பதால் என் சகோதரர்கள் வீட்டில் மாறிமாறி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, என் சகோதரர் நடராஜன் வீட்டில் தற்போது குடியிருந்து வருகிறார். என்னுடைய

எதிர்வழக்குரையில் வாதிக்கு சரிசமமான பங்கு உண்டு என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி ஏற்கனவே வாதி மற்றும் எங்கள் சகோதரர்களுக்குள் பாகம் ஏற்பட்டுவிட்டதால் வாதிக்கு பாகம் இல்லை என மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ வாதிக்கு பங்கு இல்லை என சொல்லவில்லை, ஆனால் சொத்து சம்மந்தமாக நாங்கள் பேசிக்கொண்டபோது வாதி தானாக முன்வந்து பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ளபடி சொத்துக்களை பிரித்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டு கையெழுத்து போட்டுக்கொடுத்தார். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என் வசம் உள்ளது. பி.வா.சாஆ–3 ஆவணத்தின் அசலை என் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எங்களுக்கு தேவைப்படும் என்பதால் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் அசலை நான் தற்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். அந்த ஆவணத்தின் அசல் **பி.வா.சா.ஆ.17**. பி.வா.சா.ஆ–3 ஆவணத்தின் 4ம்தாள் 1997ம் ஆண்டு டிசம்பர் மாதம் கருவூலத்திலிருநது வெளிவந்ததாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 மற்றும் 17 ஆவணங்கள் 20.06.1997 தேதியில் எழுதப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 20.06.1997 தேதியில் நடராஜன் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். வாதி தன்னுடைய பங்கை கேட்டார் என்றும், அப்போது நாங்கள் உனக்கு குழந்தைகள் இல்லை, உனக்கு எதற்கு பங்கு என கொடுக்க மறுத்தோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 மற்றும் 17 ஆவணங்கள் எழுதப்பட்டதாக சொல்லப்படும் தேதியில் நடராஜன் கையெழுத்து செய்யவில்லை என்பதால், அந்த ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதியின் பங்கை மோசடி செய்வதற்காக வாதியின் கையெழுத்தை தெரிந்து கொண்ட நாங்கள் பி.வா.சா.ஆ.3 மற்றும் 17 ஆவணங்களில் மோசடியாக கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.25/2டி சொத்து சம்மந்தமாக நானும், 3ம்பிரதிவாதியும் மட்டுமே ஆவணம்

ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் என்னால் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணங்கள், பாகவிடுதலை ஆவணங்கள் ஆகியவை வாதிக்குதெரிந்தே ஏற்படுத்தப்பட்டது என சொல்லியுள்ளது உண்மையல்ல என்றும், அந்த விவரம் வாதிக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் வழக்கு விவரம் வாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை வாதியும் ஒப்புக்கொண்டு தழுவி ஏற்றுக்கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து இதுவரை பிரிக்கப்படவில்லை என்றும், வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/5 பாகம் உள்ளது என்றும், அந்த பாகம் அவருடைய கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றும், அதனால் வாதி தன்னுடைய வழக்குரையில் கூறியவாறு 1/5 பாகம் பெற அருகதை உடையவர் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு வழக்குரையில் கூறியபடி அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.